2017 ஜூலை 10]

165—

ஜவுளிப் பூங்கா

***1224—திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டையில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *அருப்புக்கோட்டையில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், நீங்கள் எல்லாம் இவ்வாறு கோபப்படக் கூடாது. இந்தக் கூட்டத் தொடரிலேயே உங்களுக்கு ஒரு மூல வினா கேட்கும் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன், 5 துணை வினாக்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். தற்போது நீங்கள் இவ்வாறு எழுந்து நின்று கேட்பது முறையல்ல, உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, அருப்புக்கோட்டையில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், அவர் கைதூக்கும்போது வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள்.*

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம் இல்லையென்று சொன்னார்கள். ஜவுளிப் பூங்காவாக அமைக்காவிட்டாலும்கூட, சிட்கோ அளவில் சிறிய சிறிய தொழிற்பேட்டைகளை அமைக்கலாம். ஏன் கேட்கிறோம் என்றால், இப்போது இருக்கிற நெசவாளர் குடும்பங்களில் படித்துவிட்டு வரும் பிள்ளைகள் நெசவுத் தொழிலுக்கு செல்வதற்குத் தயாராக இல்லை. அவர்கள் சிறு தொழிலை சுயமாகச் செய்வதற்கு வசதியாக பெரிய அளவில் ஜவுளிப் பூங்கா ஆரம்பிக்க வேண்டுமென்றால், பெரிய தொழில்முனைவோர் வேண்டும் என்ற எண்ணம் அரசிற்கு இருக்கிறது. ஆகவே, அப்படி இல்லாமல் நெசவாளர் குடும்பங்களில் வாழ்கின்றவர்களுக்கு, சுய தொழில்களை உண்டாக்குகின்ற அளவிற்கு சிட்கோ போன்ற சிறு சிறு தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டும். கைத்தறி அல்லது power loom–க்காக மட்டுமே நீங்கள் அமைத்தால்தான் எதிர்காலத்தில் நெசவாளர் குடும்பங்களின் பிள்ளைகள் சுயமாகத் தொழில் செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகும். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அந்தத் தொழில் அழிந்து கொண்டே இருக்கிறது. தமிழ்நாட்டில் நூல் மார்க்கெட்டை யார் fix செய்கிறார்கள் என்று சொன்னால், Bhiwandi, Ichalkaranji–லும்தான். Bhiwandi–யிலும் Ichalkaranji–யிலும்தான் நிறைய power looms இருக்கின்றன. தமிழ்நாட்டில் நம்முடைய நூல் மார்க்கெட்டை நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரம் அவர்களுக்குத்தான் இருக்கிறது. அப்படியில்லாமல், எதிர்காலத்திலே நூல் அதிகமாக உற்பத்தியாகிற தமிழ்நாட்டிலே, அதிகப்படியான power loom வரவேண்டும். Power loom–ஐ பொறுத்தவரையில், இப்பொழுது Air jet loom வந்துவிட்டது. அதையும் தாண்டி rapier loom என்று advance ஆக வந்துவிட்டது. இப்படியெல்லாம் power loom advance ஆக வருகிறபோது, அவற்றோடு நாம் போட்டிப் போடக்கூடிய அளவிற்கு நம்முடைய வருங்கால சந்ததியினரைத் தயார் செய்வதற்கு வசதியாக, பெரிய அளவில் தொழிற் பூங்காவாக இல்லாவிட்டாலும்கூட சிட்கோமூலம் சிறிய, சிறிய தொழிற் பூங்காக்களை, அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்ப அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

2017 ஜூலை 10]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தொழிற் பூங்காக்களை அமைப்பதற்கு தொழில்முனைவோர் அதிகம் முன்வராத காரணத்தால், நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறிய தொழிற் பூங்காக்களை அமைப்பதற்கான திட்டத்தை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், அதற்காக 2.5 கோடி ரூபாய் மானியமாகக் கொடுப்பதற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, சிறிய தொழிற் பூங்காக்கள் அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.*

விருதுநகர் மாவட்டத்தில் 5–11–2011 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், சிறிய ஜவுளிப் பூங்காக்கள் அமைப்பது குறித்து ஜவுளி உற்பத்தியாளர்களைக் கோரியதில், பெரிய அளவில் முதலீடு தேவைப்படுவதைக் காரணம் காட்டி, அருப்புக்கோட்டை பகுதியிலுள்ள ஜவுளி உற்பத்தியாளர்கள் எவரும் ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரவில்லை. சிறிய ஜவுளிப் பூங்கா அமைப்பது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும், தொழில்முனைவோர் எவரும் கலந்துகொள்ள முன்வரவில்லை. ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில்முனைவோர்கள் முன்வர, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை அமைத்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுவது குறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. எதிர்காலத்தில், நீங்கள் கொண்டு வருகிற நேரத்தில், நான் உடனிருந்து, அங்கே சிறிய அளவிலே சிட்கோ தொழிற் பூங்கா*

அமைக்கப்படுகின்ற நேரத்தில், தொழில்முனைவோர் மட்டுமல்ல, தொழில்முனைவோருக்குத் தேவையான மின்சார வசதி, கழிவுநீர் வசதி போன்ற எல்லா வசதிகளையும் நாங்கள் செய்து தருகிறோம் என்று சொல்கிற நேரத்தில், சிறிய அளவிலே சாயத் தொழற்சாலையை அமைத்துக் கொடுப்போம் என்று சொன்னால், நிச்சயமாக தொழில் முனைவோர் முன்வருவார்கள். இங்கே மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கு தேவை இருக்கிறதோ, தேவையிருக்கிற இடத்திலே அமைப்போம் என்று சொன்னால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதற்கு வேண்டிய பணிகளை அரசு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 29–11–2010–ல் விருதுநகரை மையமாகக் கொண்டு, 6 தென் மாவட்டங்களை இணைத்து, விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத்திற்கு நாங்கள் அடிக்கல் நாட்டு விழா நடத்தினோம். அதற்குரிய பணம் தந்ததோடு எங்கள் பகுதியில் looms, light எல்லாம் செய்து கொடுத்தோம். சாயத்தொழிற்சாலைக்கும் சேர்த்து, மொத்தம் 86 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவானது. அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுகிறதா? இல்லை, செயல்படாமல் நிறுத்தப்பட்டு விட்டதா? அந்தத் திட்டத்திற்காக வந்த பணம் முழுவதும் செலவழிக்கப்பட்டுள்ளதா, இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். அந்தப் பணத்தை நாங்கள் கஷ்டப்பட்டு வாங்கினோம். அப்போது திரு. தயாநிதி மாறன் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தார். துணை முதலமைச்சராக இருந்த மாண்புமிகு தளபதி அவர்கள்தான் அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அந்தப் பணத்தை செலவழிக்கவில்லை என்றால், உடனடியாக அந்தப் பணிகளை நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் மாபெரும் கைத்தறிக் குழுமத்தினை ரூ.87.68 கோடி திட்ட மதிப்பீட்டின்கீழ், 5 ஆண்டுகளில் செயல்படுத்தும் பொருட்டு, 2009–2010–ல் மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மத்திய அரசு அதற்கு ஒப்புதல் அளித்தது. அதற்குப் பின்னர், மத்திய அரசு அந்தத் திட்ட மதிப்பீட்டை revise செய்ய வேண்டுமென்று திரும்பவும் அந்தக் கோப்புகளைப் பெற்று, 2015–ல் புதிய மதிப்பீட்டினை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் மதிப்பீட்டை 79.20 கோடி ரூபாயாகக் குறைத்துத் தந்திருக்கிறார்கள். இதுவரை இந்தத் திட்டத்திற்காக 36.35 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டப் பணிகள் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.

திரு. என்.ஜி. பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பனப்பாக்கம், நெமிலி போன்ற பகுதிகள், விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. விசைத்தறித் தொழிலும், நெசவுத் தொழிலும் அதிகமாக நடைபெற்று வருவதால், பனப்பாக்கம் பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு சொன்ன பதிலேதான், இவருக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் பூங்கா அமைப்பதற்கு தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால், பூங்காக்கள் அமைப்பதற்குண்டான ஆயத்தப் பணிகள் அனைத்தையும் செய்வதற்கும், நிதி உதவி செய்வதற்கும், தொழில்நுட்ப உதவிகள் செய்வதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.